BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# வாகன நிறுத்தம் மற்றும் கட்டிடங்களுக்கான தர நிலைகள் மீதான வசந்த கால நினைவூட்டல் கொடுக்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் விரும்புகிறது

இந்த வசந்த காலம் துவங்குகையில், நமது நகரத்தின் தரநிலைகளைப் பேணுவதிலும் உப சட்டங்களுக்கு இணங்குவதிலும் நம் அனைவருக்கும் ஒரு பங்காற்றல் இருக்கிறது என நகர நிர்வாகம் நினைவூட்ட விரும்புகிறது.

அனைவருமே சுத்தமான மற்றும் பாதுகாப்பான சுற்றுப்புறங்களை அனுபவிக்கவும், மற்றும் பகிரப்பட்ட பொது இடங்களை பராமரிக்க உதவும் வழிகாட்டியாகவும் செயல்படுவது ப்ராம்ப்ட்டன் நகரத்தின் உபசட்டங்களே ஆகும்.

குடியிருப்பாளர்கள் தங்கள் அண்டைவீட்டாருக்கு நல்லதொரு பக்கத்து வீட்டுக்காரராக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், எவ்வாறு:

- நடைபாதையை தெளிவாக வைத்திருத்தல்; நடைபாதைகள் அல்லது தெருக்களை அடைக்கின்ற வகையில் வாகனங்களை நிறுத்தலாகாது
- அதிக இரைச்சலைக் குறைத்தல்; இரைச்சல் மற்றும் தொல்லைகள் குறித்த விதிமுறைகள் இணக்கமான சமூகங்களை உருவாக்கவும் பராமரிக்கவுமே உதவுபவையாகும்
- கட்டிடம்/சொத்து தரநிலைகளை பூர்த்தி செய்ய முற்றங்களைப் பராமரித்தல்; பார்க்கச் சகிக்காத மற்றும் அபாயகரமான நிலையில் இல்லாத வகையில் சுத்தமான மற்றும் நேர்த்தியான ஒரு நிலையை உறுதி செய்தல்,
- வாகன நிறுத்தம் பற்றிய ஒரு சலுகை கொடுக்கப்பட்டிருந்தால் தவிர, நகர வீதிகளில் அதிகாலை 2-6 மணி வரையிலோ அல்லது ஒரு சமயத்தில் மூன்று மணி நேரத்திற்கும் மேலாகவோ வாகனங்களை நிறுத்தாமல் இருத்தல்.

பனி அகற்றுதல், மிக இரைச்சலான ஒலி எழுப்புதல் மற்றும் வாகன் நிறுத்த விதி மீறல்கள் போன்ற பொதுக் குடிமைக் குற்றங்கள் தொடர்பான நகரத்தின் உப சட்டங்களை, குடியிருப்பாளர்கள் கடைப்பிடிப்பதை ப்ராம்ப்ட்டன் நகரின் உபசட்டங்களுக்கான அமலாக்கப் பிரிவு, உறுதி செய்கிறது. சாலைகள், நடைபாதைகள், பூங்காக்கள் மற்றும் பிற பொது இடங்களை, பொதுமக்கள் பயன்படுத்துவதால், அவர்களின் பாதுகாப்பை பராமரிக்க இந்த பிரிவு பாடுபடுகிறது.

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

குடியிருப்பாளர்கள் தங்கள் சொத்துக்களை தாங்களே பராமரிப்பதை உறுதி செய்வதற்காக, தனியார் சொத்து தொடர்பான குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சொத்து தரநிலைகள் பிரிவு பொறுப்பேற்கிறது. அதிகப்படியான புல் வளர்ச்சி மற்றும் களை வளர்ச்சி, அத்துடன் குப்பை மற்றும் குப்பைகள் பற்றிய புகார்களை நிவர்த்தி செய்ய ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர்.

மேலும் அறிய வருகை தரவும் brampton.ca/bylaws.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ஆரோக்கியமான மற்றும் தடையற்ற வசந்த காலத்தை உறுதி செய்வதில் நம் அனைவருக்கும் பங்கு உள்ளது. நமது சமூகத்தை பாதுகாப்பாகவும், தூய்மையாகவும் வைத்திருக்கவும், ப்ராம்ப்ட்டன் நகரின் உபசட்டங்களுக்கான குழுவானது, ஆண்டு முழுவதும் செயல்படுகிறது. மிதவெப்பமான காலநிலை திரும்பவும் வரும் போது, சொத்துக்களின் தரத்தை பராமரிப்பதன் மூலமும், இரைச்சல் மற்றும் வாகன நிறுத்துமிட விதிகளை கடைபிடிப்பதன் மூலமும் நாம் அனைவரும் நமது சுற்றுப்புறங்களை மகிழ்ந்து அனுபவிக்க முடியும் என்பதை நிர்வாகம் உறுதி செய்வதற்கு நம்மால் உதவ முடியும்"

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நாம் மிதவெப்பமான காலநிலையை வரவேற்க வெளியில் செல்லும்போது, பக்கத்து வீட்டுக்காரருக்கு  நாம் ஒரு நல்ல அண்டை வீட்டாராக இருப்பதற்கும், அனைவரும் செழிப்பாக இருக்கும் வகையில் பாதுகாப்பான இடங்களை உருவாக்குவதற்கும் சில முக்கிய விஷயங்களை நம்மால் செய்ய முடியும். நீங்கள் வாகன நிறுத்தம் செய்யும் இடங்கள் மற்றும் உங்களின் ஒட்டுமொத்த சொத்துப் பராமரிப்பு, இரைச்சல் உண்டாக்குதல் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு நமது நகரத்தையும் சமூகத்தையும் கவனித்துக் கொள்ள எங்களுக்கு உதவுங்கள். நம் மீது அக்கறை கொள்ளப்படுவதை உறுதிசெய்வதில் நாம் சிறிதளவு செய்தாலே அது வெகு காலத்திற்கு நிலைத்திருக்கும்."

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சட்டவடிவாக்கல் சேவைகள்*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்

multiculturalmedia@brampton.ca